Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

31 மே 2016

**Pastoral letter No/GR/ 27/ 2016**

# ஆயர் திருமுகம்

## அருட்பணிப்பேரவை தேர்தல்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

நமது மறைமாவட்டத்தின் நான்காவது அருட்பணிப்பேரவை 02.11.2013லிருந்து 22.04.2016 வரை சிறப்பாக செயல்பட்டு நிறைவடைந்துள்ளது. அதன் சிறப்பான செயல்பாட்டிற்கு உறுதுணையாக நின்ற நம் மறைமாவட்ட குருகுலமுதல்வரும் பேரவையின் துணைத் தலைவருமாகிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பேரவையின் செயலர் அருட்திரு. மிஜோ புத்தன்புரைக்கல், இணை செயலர் திரு. ஜாண், பேரவைக் குழுக்களின் தலைவராக செயலாற்றிய அருட்தந்தையர்கள், செயலராக செயலாற்றிய பொதுநிலையினர், உறுப்பினர்களாக இருந்து சிறப்பான ஆலோசனைகள் வழங்கிய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்பணிப் பேரவை என்பது மறைமாவட்ட மேய்ப்புப் பணியை மேற்கொண்டிருக்கும் ஆயருக்கு ஆலோசனைகள் வழங்கி, அவரோடு ஒத்துழைத்து மறைமாவட்டத்தின் உயர்வுக்கும் மறுமலர்ச்சிக்கும் உறுதுணையாய் நிற்கின்ற ஓர் உன்னத அமைப்பாகும். இப்பேரவையின் தீர்மானங்கள் இறுதியானவை அல்ல, எனினும் அவைகள் ஆயருக்கும் திருஆட்சியமைப்புக்கும் பல்வேறு தீர்மானங்களை உருவாக்க உதவும் உந்து சத்திகளாகும். இந்த வகையில் அருட்பணிப் பேரவை நம் மறைமாவட்டத்தின் உன்னத அமைப்பாக, 18.12.2001 லிருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த அருட்பணிப் பேரவையின் 5- வது பேரவை 1.10.2016 – லிருந்து செயல்பட இருக்கின்றது. விரைவில் 5- வது அருட்பணிப் பேரவையின் தேர்தல் நடைபெற இருப்பதால், நமது சீறோமலபார் திருச்சபையின் சட்டதிட்டங்களின் அடிப்படையில் தேர்தல் நடைமுறைகள் மற்றும் உறுப்பினர் தகுதிகள் பற்றி உங்களோடு ஒரு சில கூற விழைகிறேன்.

**உறுப்பினருக்கான தகுதிகள்:**

- 21 வயதுக்கு மேற்பட்ட திருச்சபையின் உறுப்பினர்கள்.
- திருச்சபையின் கட்டளைகளுக்கும், திரு ஆட்சியமைப்புக்கும், திரு ஆட்சியாளர்களுக்கும் மதிப்பளித்து கீழ்ப்படியும் பணிவு கொண்டோர்.
- தகுதியான திருவருட்சாதனங்களைப் பெற்று அதை அன்றாட வாழ்வில் கடைபிடித்து வருவோர்.
- திருப்பலியிலும் அருட்சாதனக் கொண்டாட்டங்களிலும் தவறாமல் கலந்துகெள்வோர்.
- முன்மாதிரியான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வோர்.
- பங்கு மற்றும் மறைமாவட்ட வளர்ச்சியில் அக்கறை கொண்டோர்.
- மேற்கூறிய தகுதிகளோடு பங்கு பேரவை மற்றும் அருட்பணிப் பேரவை கூட்டங்களில் தவறாது கலந்து கொள்வேன் என்ற உறுதிப்பாடு உடையோர்.

**தேர்தல் நடைமுறை:**

- முதற்சுற்று தேர்தல் ஒவ்வொரு பங்கிலும் நடைபெறும்.
- 21 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்ட இருவர், 35 வயதுக்கு மேற்பட்ட இருவர், பெண்கள் இருவர் என ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ் 6 பேரில் பெண்கள் குறைந்த பட்சம் இருவரும், அதிக பட்சம் மூவரும் இருக்கலாம். ஆண்கள் குறைந்த பட்சம் மூவரும் அதிகபட்சம் நால்வரும் இருக்கலாம்.
- பங்களவில் தேர்தலை 26.06.2016-க்கு முன் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை ஒவ்வொரு பங்குதந்தையும் 27.06.2016க்கு முன் தேர்தல் தலைமைப் பொறுப்பாளர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களுக்கு பங்குதந்தையர்கள் அதிகாரபூர்வக் கடிதத்தோடு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- இரண்டாம் சுற்று தேர்தல் மறைவட்ட அளவில் நடைபெறும். முதற்சுற்றுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் வாக்களிக்கவும் தேர்ந்தெடுக்கப்படவும் தகுதியுடையோராவர்.
- ஒவ்வொரு மறைவட்டங்களிலிருந்தும் 21 – 35 வயதுக்குட்பட்ட இருவர், 35 வயதுக்கு மேற்பட்ட இருவர், பெண்கள் இருவர் என ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவ் 6 பேரில் பெண்கள் குறைந்தபட்சம் 2, அதிகபட்சம் 3 என்றும் ஆண்கள் குறைந்த பட்சம் 3 அதிகபட்சம் 4 என்றும் இருக்கலாம்.
- இரண்டாம் சுற்று தேர்தல் மறைவட்ட அளவில் நடைபெறும் நாட்கள்
    1. 10.07.2016 – படந்தாலுமூடு
    2. 17.07.2016 – நித்திரவிளை
    3. 24.07.2016 – சூசைபுரம்
    4. 31.07.2016 – மஞ்சாலுமூடு
    5. 07.08.2016 – ஆறுகாணி
    6. 14.08.2016 – தக்கலை-பிலாங்காலை

இரண்டாம் சுற்று தேர்தல் சிறப்பாக நடைபெற அனைத்து மறைவட்ட பேரருட்தந்தையரும், அம் மறை வட்டத்துக்கு உட்பட்ட அனைத்துத் தந்தையர்களும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று அறிவுறுத்துவதோடு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மறைவட்ட அளவில் இரண்டாம் சுற்றுத் தேர்தலை சிறப்புடன் நடத்தி ஐந்தாவது அருட்பணிப் பேரவையைச் சிறப்புடன் அமைக்கும் பொறுப்பை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை மிஜோ புத்தன் புரைக்கல், திரு. ஜான் ஆகியோரிடம் ஒப்படைத்துள்ளேன் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தேர்தலில் அனைவரும் தங்களை முழுமையாய் ஈடுபடுத்திக்கொண்டு 5-வது அருட்பணிப்பேரவையை சிறப்புடன் அமைக்கவும் மறைமாவட்டத்தின் வளர்ச்சியில் பங்கு பெறவும் உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

ஈசோ மிசிகாவில் மிகவும் அன்புடன்,

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச.**

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

***N.B.:***

***Kindly read this pastoral letter in the church on June 5, 2016 at the end of the Holy Qurbana***